புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

உ

விரோதிஷு (1889) ஆவணிமீ உ௨உ ஆரூடமானது

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:

யாழ்ப்பாணப் பட்டினம்	ரூ 5·00
இலங்கை தமிழும்	9·00
இலங்கை இந்தியா	ரூ 8·00
இலண்டன் தமிழும்	13·00
சொடுவாய்ப்பகுதி	ரூ 9·00
இலண்டன் தமிழும்	13·00

முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

விளம்பரவிகிதம்.

முன்முறைக்கு:	
,, ஒருகலம்	ரூபா 10·00
,, அரைக்கலம்	,, 5·50
,, காற்கலம்	,, 4·00

அதிகத முறைக்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

''எவனத்தானு ரல்லவை கேட்க அவனத்தானும், ஆன்ற பெருமை தரும்''.

''சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேக்கச் செலம்பூத்த நிகமாக மக்களோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்கலிங்கப் பரம்பூத்த சைவங்கோபாரோர் தாங்கப்,
பேர்பூத்த வொளன்றத் தினிது நூல்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதுமதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழவாம்''

''வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.''

புத்தகம்—௪ரு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஷு பங்குனிமீ ௯உ; (1934 மார்ச் 19) திங்கட்கிழமை. { இலக்கம்—௯௩.

தெய்வச் செந்தமிழினுந் திருத்தமா?

தெய்வவடி வாதலினுற் றெய்வவாய்த் தோன்றலினுல்
தெய்வங் கரத்தெழுதிச் சீர்ப்பனுவற்—றெய்வமுறை
செய்து முதல்கோடுத்துச் சீருறலாற் செந்தமிழே
ஐயமறத் தெய்வமொழி யாம்.

உலகின்கண் வழங்கும் மொழிகள் பலவற்றுள்ளும், தெய்வத்தன்மை—தோன்மை—இனிப்பு —வனப்பு— அருட்டிறம் —அற்புதச்செயல் —இலக்கணவரம்பு— இலக்கிய நூற்பெருக்கு —உயிர்க்கு உறுதிபயக்கும் அறமாதிய நான்கு உயர்பொருளுடைமை ஆகியவற்றால் ஒப்புயர்வின்றி விளங்குவது, நமது தாய் மொழியாகிய தமிழ்மொழியே என்பது, மொழிநூல் வல்லார் யாவர்க்கும் ஒப்பமுடிந்த முடிபேயாம்.

ஈண்டுத் தெய்வத்தன்மை யாதியாகத் தொகுத்துச்சுட்டியுள்ள ஒன்பான் சிறப்பியல்களுள், தெய்வத்தன்மையுடையது தமிழ் எனவும், அது திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய நன்மொழி யாகலின் செம்மைப் பண்படுத்துச் செந்தமிழ் எனப் பண்டைச் சான்றோர்வழி வழங்கி வருகிறதெனவும், அதனால் அதனைத்திருத்த முயலுதல் சில்வாழ்நாள் பல்பிணிச் சிறறறிவுடைய மக்கட்கு எட்டுணையும் இயல தெனவும், மொழித்திறத்தின் முட்டறுத்து முதுநூற்பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெற்ற முன்னோர் மொழிபொருளையன்றி அவர்மொழியும் பொன்னேபோற் போற்றிச் சிலவற்றை எடுத்துக் காட்டு முகத்தால் இனிது விளக்குவாம்.

ஒசை யொலியெலாமாகி உலகுக் கொருவனுய் ஒளிரும் இறைவன், சொற்கும் பொருட்கும் உயிராய் — மெய்ஞ்ஞானத்தின் தோற்றமாய்த் துலங்குகிறான் என்பது தொன்னூற் றுணிபு. இதனுலன்றே சத்தப் பிரமம்—மாதிரசரீரி எனத் தனிமுதற்கடவுள் வழங்கப்படுகிறார்.

அருளம்பலத்தில் ஐந்தொழில் நாடகம் ஆடுகின்ற ஆன்டவனது திருவடி திருவபிறு திருத்தோள் திருமுகம் திருமுடி ஆகிய உறுப்புக்கள் முறையே 'நமசிவய' என்னுந் திருவைந் தெழுத்துருவாய்த் திகழுஞ் சிறப்புடையவாகும் என்பதை,

''ஆடும் படிகேள்கல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேகரம் —கூடு
மகரம் உதரம் வளர்தோள் கொரம்
பகருமுகம் வாழுமிடப் பார்''

என்னும் உண்மை விளக்கம் உறுதிப்படுத்தும்.

''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்''
''முத்தமிழும் நான்மறையும் ஆனுன் கண்டாய்''

என்னும் அப்பர் அருட்பனுவல்கள், தமிழுருவாய்த் தனித்தலைமைக் கடவுள் விளங்குகின்றார் என்பதற்குத் தக்க சான்றாகும். இன்னும்,

''எழுத்தெல்லாம் உடலாகச் சொற்களுறப் பாச
ஏத்தமகப் பொருளுயிராய்ப் புலங்கருவி யினமாய்
வழுத்தரின்ற பாவிலே மாலினுடையாக
வருகின்ற அணியியலே மாலினுடையாகப்
பழுத்தொழுகு சுவிக்கவையே பணிமொழிபதாகப்
பகருமொரு நாறுவிதப் பயனுயிர்கட் கருளி
அழுத்தமுறு மின்னெரிநீ தமிழகத்துத் தனழய
அரசுபுரி தமிழணங்கை அங்கமுறிழ்ப் பாடே''

என்னும் தனிப்பாசுரத்தின் உருவக வாயிலாகவும் தமிழிய ஆருவாய்த் தெய்வம் விளங்குகின்றதென்பது தெளிவாம்.

இறைவன் வலக்கையிலேந்திய உடுக்கையிலிருந்து வடமொழி தோன்றிய ஞான்றே அவனது திருவாயிலிருந்து முப்பத்து மூன்று செந்தமிழ்ச் சொற்கள் தோன்றின அவை திட்பம் நுட்பஞ் செறிந்த நான்கு நூற்பா வடிவாய் இசைநுணுக்கம் என்னும் முத்தமிழ் முதநூலாயிற்று. அதனை இறைவன் ஆசிரிய வடிவாயமர்ந்து அகத்திய முனிவர்க்கு அறிவுறுத்தருள, அதன் வழியே அகத்தியம் தொல்காப்பியம் ஆதிய நூல்கள் தோன்றின என்பர்.

இவ்வுண்மை,

''தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்துமவன் யுணர்வு மாமே''

என்னுந் திருமூல நாயனுர் திருமந்திரத்தானும்,

''வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி
அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந்
தொழுதேத்தவுங்
குடமுனிக்கு வலியுறுத்தார்
சொல்லேற்றுப்பாகர்''

என்னுஞ் சிவஞானயோகிகள் திருவாக்கானும் செவ்விதிற்றெரிவாம்.

பிறையணிசடைப்பெருமான் மறை முதலிய முதனூல்கள் அருளிய திருவாயால் தன்பெயராடு புணர்த்த, ''இறையனுகப் பொருள்'' என்னும் இலக்கணநூல் வகுத்தருளினார் என்னும் செய்தி,

''மறைமுதற் னிர்த வாயான்
மதிமுகிழ் முடிதத வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி
இலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடட
யனைத்தும் வென் றுரி யத்தோ
நிறைந்தரு தமிழ்த் தெய்வத்தை
யுண்ணினைக் தேத்தல் செய்வாம்''

என்னும் அமுதவாக்கு அறிவுறுத்து கின்றது.

இன்னும், இறைவன் தருமிக்காகக் ''கோங்குதேர் வாழ்க்கை'' என்னுந் திருப்பனுவலையும், பாணபத்திரர் பொருட்டுச் சேரமான் பெருமானுயனுருக்கு, ''மதிவலி புரிசை மாடக் கூடல்.....'' என்னும் திருமுகப் பாசுரத்தையும், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியருக்கு, அடியார்க்கெளியவன் சிற்றம்பலவன்..... ...'' என்னும் திருப்பாடலையும் இயற்றியருளியிருக்கிறார் எனக் காண்கிறோம்.

சுந்தரமூர்த்தி நாயனுருக்கு, ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும்அடியேன்'' எனவும், சேக்கிழார் சுவாமிகட்கு, 'உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்'' எனவும் இறைவர் முதலடி எடுத்துக் கொடுத்தருளினார் என்பது ஆன்றோர் அநுபவத்திற் கண்ட உண்மையாம். இதனை, பிற்காலத்துக் கம்பர் என்னும் பெயர் பெற்று விளங்கிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தாம் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில்,

''அடியார் பெருமையும் அருமையும்
காளும் அறியும் பலகாணர்
அவர் வரலாறு விரித்தரை
செய்பவர் யாரென வுட்கருதிக்
கடியார் மற்றவர் அன்பதனையும்
கண்காண் படி செய்து
காமரு முதநு மெடுத்தரு ளினரிக்
கடல்சூழ் புவியிடை யிப்
படியார் பெற்றார் தமிழ்மான் மியமெப்
பாடை களுர் குளிப்
பாக்கிய நந்தவ மென்பயல்லோரும்
பகரப் படுவதோ''

அடியார் தடிகும் குன்றைத திருமுனி
தாளோ தாளேலோ
சைலப் பயிர்தழை யத்தழை யுர்புயல்
தாளோ தாளேலோ.''

என்று இயைபுற இன்புற எடுத்து விளக்கியிருத்தல் நுனித்துணரத்தக்கதாம். [வரும்]

—சிவ நேசன்.

கோயில் அற்புதங்கள்.

(சக்கிவார்த்தி ஸ்ரீநிவாஸன்.)

இந்தியாவானது மர்மங்கள் பல நிறைந்த தேசம் எனக் கருதப்பட்டு வருகின்றது இந் நாட்டைக் காணவரும் வெளிதேசப் பிரயாணிகளுக்கு இந்தத் தேசத்திலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களின் நூய சாமானிய வாழ்க்கையும், மதப் பற்றும், சீரிய சீலங்களும், மர்மங்களாகக் காணப்படுகின்றன. நமது சாஸ்திரங்களைத் துருவி ஆராய்ந்துவரும் மேனுட்டு ஆசிரியர்களுக்கும் குன்றாத ஞானக் களஞ்சியமாயிருக்கும் சம்ஸ்கிருத பாஷையும் அதன் இலக்கியமும் அறிவொண்ணுத மர்மமாகவே இருக்கின்றன. நம்நாட்டிலுள்ள பல்வேறு குகைகளும், மாட்சிமை பொருந்திய கோயில்களும் ஆகாயத்தைத் தொட்டுக் கொண்டு நிற்கும் உயரமான கோபுரங்களும், கல்வெட்டுக்களும் சிற்பிகளுக்கு மர்மமாக இருக்கின்றன. இக் கோயில்களில் இலங்கும் ஈசுவரனின் அற்புதமான சக்தியைக் கண்டு ஆச்சரியப்படுபவர் அனந்தம் பேர். இம்மர்மங்களிலெல்லாம் முதன்மையானதாக விளங்குவது யதெனில் மேனுட்டு இயந்திரங்களின் சக்தியைப் பழிக்கக்கூடிய அற்புதமான சக்தி வாய்ந்த இந்திய யோகாப்பியாச முறைதான். இதற்கு தாந்போல் வியப்பளிக்கக் கூடியன நமது கோயில்களின் மர்மங்களே. இலைகள் நமது சாதாரண அறிவையும் கடந்து, பௌதிகசாஸ்திரம் கற்பித்தும் தத்துவங்களையும் நிராகரித்து நிற்கின்றன.

1001 இலைகள்.

ஓர் இடத்தில், சாப்பிடுவதற்காக ஆயிரம் இலைகள் போடப்படுகின்றன; சாப்பாடு முடிகிறது; பின்பு இலைகளை எடுக்கும்போது எண்ணினால் ஆயிரத்தோர் இலைகள் இருக்கின்றன. இந்த அதிசயமான மாறுதல் எக்காரணங்களினால் உண்டாகின்றது என்பது யாராலாவது கூறமுடியுமா? முடியாது. மலையாள தேசத்திலுள்ள வைக்கம் கோயிலில் இது தினசரி சம்பவமாக இருக்கின்றது. ஒவ்வொரு தினமும் அக்கோயிலில் ஆயிரம் பேர்களுக்குப் போஜனம் அளிக்கப்படுகின்றது. கோபுர வாயிலில் இரண்டு பொலீஸ் காரர்கள் காவல் காத்துக் கொண்டிருக்கின்றனர். அநேகம்பேர்களின் முன்னிலையில் நன்றாக எண்ணப் பட்டதற்குப் பிறகு ஆயிரம் இலைகள் உள்ளே அனுப்பப்படுகின்றன. இலைகள் வரிசை வரிசையாகப் போடப்பட்டபின் மற்றொருமுறை எண்ணப்படுகின்றன. அப்பொழுது ஆயிரம் இலைகளே இருக்கின்றன. பிறகு கோபுர வாயிலில் நின்று கொண்டிருக்கும் பொலீஸ்காரர்களும், மற்றவர்களும் கவனமாக எண்ணி ஆயிரம் விருந்தாளிகளை மட்டும் உள்ளே விடுகின்றனர் அவர்கள் வரிசையாக இலைகளிலுட்கார்ந்தபின் ஓர் இலைகூட மீதியிருப்பதில்லை. இதவும் நன்றாகப் பரிசோதிக்கப்படுகிறது சாப்பாடு முடிந்து விருந்தாளிகள் வெளியே செல்கையில் மீண்டும் ஒருமுறை எண்ணப் படுகிறது; ஆயிரம் பேர்களே இருக்கின்றனர். ஆனால் எச்சில் இலைகளையெல்லாம் எடுத்து, எண்ணினால் ஆயிரத்தோர் இலைகள் கணக்குக்கு வருகின்றன. ஆயிரத்தோராவது இலை எப்படி வந்தது? இதைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயற்சிசெய்தும் பயனில்லை. இல்லாக லெக்டர்களும் பொலீஸ்அதிகாரிகளும் மற்றவர்களும் அந்த ஆயிரத்தோராவது விருந்தாளியைக் கண்டு பிடிக்கப் பெருமுயற்சி செய்திருக்கிறார்கள். ஒன்றும் முடியவில்லை. இப்படி இம்மர்மம் நிகழ்ந்தே வருகின்றது. அங்கு வசிக்கும் பாமர ஜனங்கள் அக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் தெய்வமானவைக்கத்தப்பர்தாம் ஆயிரத்தோராவது விருந்தாளி என்றும், தேவர்கள் மனிதர் கண்களில் படாராகையால் தாம் உண்டவாழை இலையால் தாம் ஆங்கிருப்பதையும் உண்பதையும் அறிவிக்கிறார் என்றும் கூறுகிறார்கள்.

கோடுப்பதில் பாதி.

விஜய நகரத்திற்கு அருகிலிருக்கும் மங்களகிரி என்ற இடத்தில் நரஸிம்மஸ்வாமி கோயில் ஒன்றிருக்கிறது. இந்தக் கோயில் விக்ரஹம் மிகவும் பெரியது. அதன் வாய் எப்பொழுதும்திறந்தவண்ணமாகவே இருக்கிறது. திறந்துள்ள வாயில் நாம் ஆராதனைக்காகக் கொண்டு போகும் எந்த வஸ்துவையும் எவ்வளவு வேண்டுமானுலும் சமர்ப்பிக்கலாம். பின்பு நாம் சமர்ப்பித்தவற்றில் சரிபாதி அளவு வாயினின்றும் வெளியே வந்துவிடுகிறது. இவ்விஷயங்களில் நம்பிக்கையில்லாத மேனுட்டுப் படிப்பாளியொருவர், இதைப் பரிசோதிக்கும் பொருட்டு குல்கந்து நிறைந்த தகர டப்பியொன்றை நன்றாகமூடி லில்வைத்துச் சமர்ப்பித்தார். அந்த டப்பி அளவாகப் பாதி கத்தரிக்கப்பட்டு வெளியே வந்தது. நிறையைஅளந்து பார்த்ததில் அதவும் சரியாகப் பாதி இருந்தது. பங்கேடுவதில் ஸ்வாமி நரஸிம்மர் மிகவும் நியாயமாக இருக்கிறார்!

இத்தெய்வத்தின் சக்தி

ஆனால் இத்தெய்வத்திற்கு வேறு சக்திகளும் உண்டு. தன்னைப் பரிகசிப்பவனை இது உடனே சிக்கிக்கின்றது. சில வருஷங்களுக்கு முன்பு இந்த லன்னிதியில் ஒருநாரிகரமான சம்பவம்நிகழ்ந்தது. திமிர்கொண்டரயில்வே உத்தியோகத்தன் ஒருவன் தன் கையை இவ்விக்ரஹத்தின் வாயில் வைத்தான்; பின்பு கையை எடுக்கவே முடியவில்லை. ஆனால் தன் கையை ஏதவும் பிடித்துக் கொள்ளவில்லை என்று அவன் சொன்னான். ஆனுலும் கை எடுக்க வரவில்லை. ஆறுமணி நேரம் அவன் அவஸ்தைப் பட்டான். பின்னர் இங்கிருந்தவர்கள் சொன்ன பிரகாரம் அபராத காணிக்கை செலுத்திக் கையை மீட்டுக் கொண்டான். அதன்பின்னர்த்தான் அவனது அகம்பாவமடங்கிற்று.

இதை விடப்பெரிய மர்மம் என்னவெனில், உள்ளேபோகும் சரிபாதி வஸ்துக்கள் என்னவாகின்றன என்பதும், எங்கே செல்கின்றன என்பதும் தெரியாமல் இருப்பதேயாகும் உள்ளே சென்றவற்றையோ எடுக்க முடியாது. தொண்டைக்குக் கீழ் ஒரு குழி இருக்குமானுல் அது பாதாள உலகம் வரையிலும் சென்றுக்கவேண்டும். ஏனெனில் ஒவ்வொரு தினமும் மனைக்குக் கணக்காய்ச் சமர்ப்பணம் நடக்கின்றது மற்றும் உள்ளே போகும் வஸ்துக்களில் சரிபாதி எப்படி வெளியே வருகின்றன? இம்மர்மத்தை எப்படிக் கண்டறிவது? ஈசனின் திருவிளையாடல்கள் செப்பத் தரமோ!

எல்லாம் ஒருவினுடியில்.

வேறோர் அதிசயம்: பூஞ்சி என்ற இடத்திலுள்ள மலையில் காளிகோவில் ஒன்றிருக்கிறது இத்தேவதையின் உயரம் ஏழு அடி. இத்தேவதைக்குப் பத்துத் தலைகளும் பதினெட்டுக் கைகளும் இருக்கின்றன. இக்கோயிலின் கதவுகள் ஒருநாள் தவிர வருஷம் முழுவதும் மூடப்பட்டிருக்கின்றன. அந்த ஒருநாளில் இத்தேவதையை வணங்குகின்றவர்கள் நூற்றுக் கணக்கான எருமைகள், ஆடுகள் கோழிகளைப் பலி கொடுக்கின்றனர். கோயிலின் முன்னே பலியிடுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கும் எருமைகளையும், ஆடுகளையும் கோழிகளையும் கட்டி விடுகிறார்கள். பின்பு ஜனங்கள் அண்டைப்பக்கத்திலிருந்து ஏதோ ஓர் உபாயஞ் செய்து கோயில் கதவுகளைத் திறக்கிறார்கள். கதவுகள் திறந்த மாத்திரத்திலேயே எல்லாமிருகங்களும் ஒருவினுடியில் உயிரற்றுக் கீழே விழுகின்றன, கதவுகள் திறக்குங்கால் எவனொருவன் அத்தேவதையின் முன் நிற்கின்றானோ அவனும் அம்மிருகங்களின் கதியையே அடைகின்றான்.

(தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகஷு பங்குனிமீ ௬௨ திங்கட்கிழமை.

மோட்டர் ஆபத்துக்கள்

இக்காலத்தில் தெருவீதிகளிற் கண்டபடி யோசனையின்றிச் செலுத்தப்படும் மோட்டாதங்கள் பஸ்கள் என்னுமிவைகளால் இடையிடையே நேரும் ஆபத்துக்களையிட்டு நினைக்க நெஞ்சம் ஏங்குகின்றது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கணித்தாக, சிவலிங்கப்புளியடியில் நேற்றிரவு 7 மணிக்கு மேல் ஒரு பஸ்ஸினால், நமது இந்துசாதனத்தில் வேலையாயிருக்கும் ஸ்ரீ நாகலிங்கமேன் பவநக்கு நேர்ந்த மோசமான அபாயத்தைப் பற்றி இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். இதுமாத்திரமல்லாமல் இற்றைக்கு ஒன்றரை இரண்டு மாசங்கட்கு முன்னர் நமது அச்சியந்திரசாலைக்கு முன்பு இடே தெருவில் காலை 9 மணிவரையில் வேகமாகச் சென்ற ஒரு மோட்டர் ரதம் 10 வயசு வரையில் உள்ள ஒரு சிறுவனைத் தட்டி வீழ்த்தியதையும் அச்சிறுவன் அருந்தப்பாகத்தப்பிச் சிசிச்சை செய்யப்பட்டதையும் அந்தச் சந்தர்ப்பத்தில் எழுதியிருந்தோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தொடக்கம் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை வரையில், அதாவது ½ மைல் தூரத்துள், தமிழ் வித்தியாசாலைகளும் ஆங்கில வித்தியாசாலைகளும் சேர்ந்து 5 பள்ளிக்கூடங்கள் உள்ளன. இவற்றுட் சில தெரு வோரத்திலும் சில தெருவிற்குச் சிறிது அணித்தாகவும் உள்ளன. இந்தத் தெருவீதியில் விசேஷமாகப் பகற்காலத்தில் பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர் இடையறாது சஞ்சரிப்பதைக் காணலாம். மேலும் யாழ்ப்பாணம்-காங்கேயன்றுறை றோட்டெனப்படும் இத் தெருவீதி அதிகஞ் சனச்சஞ்சாரத்தோடுகூடிய பிரசித்த தெருவாகும் குறித்த தெருவீதிகளில் பள்ளிக்கூடங்கட்குச் சமீபமாக, "வித்தியாசாலை, மெல்லப்போ". என்னுங் கருத்தமைந்த ஆங்கில விளம்பரம் வரையப்பட்ட கம்பங்களும் நாட்டப்பட்டுள்ளன. (இவற்றைத் தமிழில் எழுதியிருப்பின் நன்றாகும்) மேலும் சில காலமாகப் பொலிஸ் ஒருவர் இந்துக்கல்லூரி முன்னிலையிற் பகற்காலத்தில் மாத்திரம் நிற்கும்படி நிறுவப்பட்டுள்ளார். இப்படியான பாதுகாப்புக்களும் எச்சரிக்கைகளுமிருப்பவும் இத்தெருவீதியாற் செல்லும் மோட்டாதங்களும் பஸ்களும், பொலிஸரில்லாத சமையத்தில் அதிக வேகமாகச் செல்வதையும் ஒன்றையொன்று முந்தச் சவாரி செய்வதையும் நாள்தோறும் கண்ணாரக்கண்டு பயப்படலானோம். பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவனோ சம் என்றவிதமாக, பஸ்சாரதிகளும் மோட்டாதம் ஓட்டிகளும் வேடிக்கைபண்ண, பலசீவர்கள் மாளவேண்டி ஏற்படுகின்றதே. இப்படி வேகமாகச் செலுத்தும் பஸ் சாரதிகள் மோட்டாதஞ் செலுத்துவோர்க்கு டோசனையில்லையா? இரக்கமில்லையா? தண்டனைக்குப் பயமில்லையா? தங்கள் உயிர்மேல் தங்களுக்கு அன்பில்லையா? அபாயத்தை விளைத்த சாரதிகள் வழிப்போக்கர் கையில் அகப்படுவரேல் பின் அவர்கள் உயிருடன் செத்த பிணத்தின் நிலையையல்லவா அடைவார்கள்; வழிப்போக்கர்கையில் அகப்பட்டால் தோலிருக்கச் சுளவாங்கிவிடுவார்களே; இவைகளையிட்டு போசிப்பதில்லையா?

குறித்த இந்த அபாயத்தை விளைத்த பஸ் சாரதி அபாயம் நேர்ந்துவிட்டதென்ற மாத்திரத்தே, பஸ்ஸின் வேகிச்சத்தை ஒழித்து விட்டு அப்பால் ஓடித் தப்பிக்கொண்டான். நெரியுண்ட ஆள் உதிரம்பெருக ஆபத்தான நிலைமையில் ½ மணிநேரத்திற்கு மேற்பட அப்படியே கிடந்தது இச்சாரதியின் செய்கை பெரிதும் அக்கிரமானதல்லவா? சகல ரத சகாயச் சங்கத்தார், வேறு எத்தனையோ கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் பஸ் சாரதிகளுக்கு விதித்துள்ளனராமே. ஆனால் இப்படியான அபாயகாலத்தில் இந்தச் சாரதிகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளை இச்சங்கத்தார் விதியாதொழிந்தமை யாது பற்றியோ? இச்சங்கத்தின் தலைவராயுள்ள ஸ்ரீ எதிர்வீரசிங்கம் என்பவர் உண்மையை விசாரித்தறிந்து இந்த அபாயம் விளைத்தவனை வெளிப்படுத்துவதே முறையாகும். அதனோடு பஸ்காரர் இனியேனும் வேகமாக பஸ்களைச் செலுத்காது தடுத்துப் பள்ளிக்கூடங்கள் முதலிய சனக்கூட்டமான இடங்களுக் கூடாகச் செலுத்தும்போது 15 மைல் லிகிதத்தில் ஓடும்படி செய்தல்வேண்டும். இந்துக்கல்லூரியின் முன்னர்க் காவல் நிற்கும் பொலிஸை காலை 7 மணிதொடக்கம் இரவு 8 மணிவரையில் கிரமமாக அங்கு நின்று காவல்செய்யும்படி செய்தல் நன்றாம்

ஆங்கில-ஜப்பானிய எதிரிடை.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன், இருக்கிற இடத்தானும் அறியப்படாது அத்தகாரத்தில் மூழ்கிக் கிடந்த ஜப்பான், உள்நாட்டுக் கலகங்களாலும் கிளர்ச்சிகளாலும் வலியற்றுக்கிடந்த ஜப்பான், இப்போது ஆதித்கன் மறையாராதிபத்தியங்கொண்ட இங்கிலாந்தையே மிரட்ட முன்வந்திருக்கிறதென்றால் யார்தான் ஆச்சரியமுறார்! பிரிட்டிஷாரின் காடுபிடிக்கும் சூட்சியையும், பிரித்தாளுந் தந்திரத்தையும், சுருங்கியசெலவில் கைத்தொழிற் பொருள்கள் உண்டாக்கும் உபாயத்தையும் ஜப்பான் தீவிரத்தில் அன்னவரிடமிருந்து கற்றுக்கொண்டது. தனது தேசம் சிறிய தாயினும், அதன் எதிர்கால வளர்ச்சியைக் கருதி மிக்க பலமுடைய கடற்படையையும் ஆயத்தஞ் செய்து வைத்தது. அதன் மூலமாக அந்நாடு, இங்கிலாந்திற்குச் சென்ற மகாயுத்தத்திற் செய்த உதவி பிரிட்டிஷாரால் என்றும் மறக்கற்பாலதன்று எனலாம். எனினும் இப்போது சிலகாலமாக, ஜப்பான், வர்த்தகவிஷயத்தில் இங்கிலாந்திற்குச் செய்து வரும் கட்டம் அங்காட்டாரால் சகிக்கமுடியாததாகிவிட்டது. ஜப்பானியர் மிகக்குறைந்தசெலவில் சகலபொருள்களையும் உற்பத்திசெய்து, பிரிட்டிஷ்நாடுகளிலேயே வர்த்தகஞ்செய்து, பிரிட்டிஷ் பொருள்களுக்கிருந்த மானத்தைக் குறைக்க, இங்கிலாந்திற் தொழிலில்லாத் திண்டாட்டம் நாடோறும் சகிக்கக்கூடாததாக அதிகரித்துக்கொண்டுவருகிறது. போட்டியைத் தடுப்பதற்காக, பிரிட்டிஷார் தமது நாடுகளில் ஜப்பானிய பொருள்களுக் கெதிராகப் பாதுகாப்பு வரிகளை விதித்தார்கள். அவற்றினாலும் ஜப்பானின் போட்டி குறைந்தபாடில்லை. சேர் பாருக, சுடச்சுடச் சுடரும் செம்பொன்னைப்போல் ஜப்பான், தனது பொருள்களை இன்னும் மேலதிகமாக அந்நாடுகளில் இறக்குமதிசெய்து பெருந்தொகைப்பணம் பெறுகின்றது. தங்கள் ஜம்பம் ஜப்பானியர்வசம் வாய்க்காது என்பதை அறிந்த பிரிட்டிஷார், "கெஞ்சினால் மிஞ்சு, மிஞ்சினால் கெஞ்சு" என்றபடி ஜப்பானோடு சமரசப் பேசினார்கள். அதுவும் தூரதிர்ஷ்டவசமாக முரிந்துவிட்டது. எனவே இனிச் செய்வதினைதென்று தெரியாத இங்கிலாந்து விழிக்கின்றது. காம் இதுவிஷயத்தில் கூறத்தக்கதொன்றுண்டு. இங்கிலாந்தின் கயவர்த்தனவினால், ஜப்பான் ஒருபோதும் தனது சலாக்கியங்களை இழக்க ஒருப்படாது அத்துடன் இருநாடுகளும் வியாபாரவிஷயத்தில் இனிச் சமமாக நிற்க முடியாது ஒன்றில் இங்கிலாந்து மேல் நிற்கவேண்டும், அல்லது ஜப்பான் மேல் நிற்கவேண்டும்! யார் மேல் நிற்கவேண்டும் என்பதை ஓர் யுத்தத்தில்தான் நிர்மானிக்கவேண்டும். ஆனால், இங்கிலாந்தை ஜப்பான் வெல்லுமோ என்பது சந்தேகமே! அத்துடன் ஆயுதங்களையும் கடற்படை, தரைப்படைகளையும் பூரணமாக வைத்திருக்கும் ஜப்பானையும் இங்கிலாந்துவெல்லும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

சென்றபிரசுரத்தில் கேம்பிரிட்ஜ் ஜூனியர்ப் பரீட்சையில் டிவி கல்லூரியில் 22 பேர் சித்தியடைந்ததற்குப் பதிலாக 17 பேர் சித்தியடைந்ததாக வெளியிட்டதை யிட்டுப் பச்சாத்தாபப்படுகின்றோம். முக்கிய காமாவலியிற் காணப்படாத ஐவர் காமன்கள் வருமாறு:—

1. இராஜசிங்கம் A.
2. இராஜசிங்கம் S.
3. செல்வரத்நம் S.
4. சிவசுப்பிரமணியம் T.
5. சிவசுப்பிரமணியம் A.

ஆக 22 பேர்.

இப்பரீட்சையில், அதிகம் சித்திபெற்ற கல்லூரிகளுள், இக்கல்லூரியும் ஒன்றாகுமென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

உள்ளூர்ச்செய்திகள்.

வண்ணை வைத்தியேசுவரன் கோவில்

மேற்படி ஆலயத்திற் சென்ற மாசி மீ ௨௩-௩-௩௪ (12-3-34) தொடாரோணமாகிய உற்சவங்கள்கட்கு நடைபெறுகின்றன வருகிற புதன்கிழமை (21-3-34) இரவு மகா யாகாரம்பமும், பஞ்ச மூர்த்திகளோடு சக்கிர சேகரப் பட்டமும் கடைபெறும். (29-3-34) வியாழக் கிழமை பகல் பத்து மணிக்கு இடபலக்னத்தில் உபய சக்கிரசேகர சோமாஸ்கந்த மூர்த்தி முதல் பஞ்ச மூர்த்திகளினதும் தீர்த்தோற்சவமும், அடுத்த நாள் சனிக்கிழமை திருக்கலியாணோற்சவமும் கடைபெறும்.

மோட்டர் விபத்து.

நேற்றுச் சாயங்காலம், வண்ணார்பண்ணைச் சிவலிங்கப் புளியடியில் ஓர் மோட்டர் விபத்து நிகழ்ந்தது. நமது இந்துசாதனாலயத்திற் கடமைபார்க்கும் ஸ்ரீ பொ. நாகலிங்கம் என்பவர் ஓர் மோட்டர்பஸ் ரதத்தினால் தட்டுப்பட்டுக் கைகளிலும் தலையிலும் அபாயகரமான காயங்களை அடைந்து, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார். இவ்விபத்திற்கு மூலகாரணமாகிய மோட்டர்பஸ் அபாயமடைந்தவுடன் வாயுவேகமாக ஓடிவிட்டது. பின்னர் பொலிசார் அதை அகப்படுத்திவிட்டனரென அறிகிலனேம்.

சுப்பிறீம் கோடு.

தனங்கிளப்புக் கொலைவழக்கு.

சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 23-ந் தேதியளவில் சாவகச் சேரியைச் சேர்ந்த தனங்கிளப்பு வசியங்கிய நிலையம்பலம் என்னையர், என்பவரைக் கொலை செய்ததாக அவ்வூர் வசிகளாகிய (1) சி. ஆறுமுகம் (2) ஆ. கந்தையா முதலிய இருவர்களுக்கும் எதிராகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணையாகி, ஈற்றில் 2-ம் எதிரி விடுதலையாக்கப்பட்டான் 1-ம் எதிரி பாரதூரமானகாயம் வருவித்ததற்குக் குற்றவாளியாகக்கண்டு 6 மாசம் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான்.

வழக்குகள் தவணைபிடப்பட்டன.

மன்னாரைச் சேர்ந்த ஓர் வழக்கும் மயிலிட்டியைச்சேர்ந்த வழக்கொன்றும் விசாரணை செய்யப்பட்டு நேமிநாதையர் நீதியரசர் எல். சி. டால்டன் அவர்கள், அவைகள் இரண்டையும் வருகிற முதற்கிழமைக்குத் தவணைபிட்டார். இத்துடன் சுப்பிறீம்கோடு முடிவடைந்தது.

நீதியரசரும் ஜூரிமாரும்.

யாழ்ப்பாணச் சுப்பிறீம்கோட்டு நீதியரசர் எல். சி. டால்டன் அவர்கள் ஓர் வழக்கின்போது கூறியன ஜூரிமாருக்குவெறுப்பைக் கொடுத்தமையால், அவர்தங் கற்றைப்பின்தவிர்த்துக்கொண்டார் வைத்திகாபிரியேல், மனுவேல் அந்தோனி என்னும் இருவர் சூசை சகிபிரான்பவனைக் கொலைசெய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். விசாரணையிலில சாட்சிகளை விசாரித்தபின், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி டக்டர் எம். வி. பி. பிரிஸ் அவர்களைக் கூப்பிட்டு விசாரணை புரியவேண்டுமென்றும், அவருக்கு முன்னால் இறந்த சூசை வாக்குமூலம் கொடுத்திருக்கிறான் என்றும் ஜூரிமார் தலைவர் மிஸ்டர் ஏ. ஜே. டபிளயூ. அருட்பிரகாசம் நீதியரசர்க்கு எடுத்துரைத்தனர். அன்று பின்னாம் டக்டர் கே. இராசா விசாரணை செய்யப்படுகையில், 'உமது சமுகத்திலும், டக்டர் பிரிஸ் சமுகத்திலும் இறந்தவன் வாக்குமூலம் கொடுத்தானோ' என்று ஜூரிகளது தலைவர் கேட்டார். அப்போது நீதியரசர் அவரைநோக்கி, 'அப்படி அவன் வாக்குமூலம் கொடுத்தான் என்பது உமக்கு எப்படித் தெரிந்ததென்பது எனக்கு விளங்கவில்லை. எனக்கும் நியாய வாதிக்கும் தெரியும் விஷயங்களிலும் பார்க்க உமக்கு அதிகமாகத் தெரியுமோ? பிள்ளை!' என்றார். இதற்கு முன் சட்டியம் பகர்ந்தவர்களே அவ்வாறு கூறி இருக்கின்றனர் என ஜூரிமார் தலைவர் கூறினர். நீதியரசர் முந்திய விசாரணைப் பிரதிகளைப்பார்த்து அப்படியே இருப்பக் கண்டு தாம் ஜூரிமார் சம்பந்தமாகக் கூறியவார்த்தைகளைத் தவிர்த்து விடுவதாக அநுதாபத்துடன் தெரிவித்தார்.

பொதுச் செய்திகள்.

அசரப்பாவின் விவாகரிக்க வழக்கு.

கொழும்புச் சுராதர வைத்தியசாலை டக்டர் வி. வி. அசரப்பா தமது மனைவியாகிய லீலாவதி, அரசாங்கசபைத் தலைவரான மிஸ்டர் ஏ. எவ். மொலமுரே என்பவருடன் சோரவிட்டு பூண்டு தனக்குத் துரோகம் விளைத்தமையினால் தனக்கும் தனது மனைவிக்குமிடையேயுள்ள விவாகசம்பந்தத்தை நீக்கவேண்டுமென்றும் மிஸ்டர் மொலமுரே நட்டஈடாகத் தமக்கு 25,000 ரூபா அளிக்கவேண்டுமென்றும் தொடரப்பட்ட வழக்கு இன்று முடிவாகுமெனக் கம்பம்பப்படுகிறது. இதனை இதுவிஷயமாக கொழும்பு டிஸ்திறிக் நீதிபதியாகிய மிஸ்டர்: டபிளயூ. எஸ். டீ. சேரம் அவர்கள் தமது தீர்ப்பைக் கூறுவர்.

பிந்தியசேதி.

குறித்த லீலாவதி மிஸ்டர் மொலமுரேயுடன் சோரமாகத் திரேகசம்பந்தம் வைத்திருந்ததைத் தாம் கண்டதாகக் கூறிய ஸ்ரீமதி ஜெயசூரியா, ஸ்ரீமதி ஜெயசேகரா, ஸ்ரீமதி அதா டீ மெல் என்னும் பெண்களின் சாட்சியத்தைத் தாம் ஒப்புக்கொள்ளுவதாக நீதிபதி கூறுகிறார் என்று இப்போதுஎமக்குக்கிடைத்த தகவலொன்று கூறுகிறது.

100 பேர் மாண்டனர்.

ஸான்சல்வடோர் என்னும் இடத்தில் சென்ற புதனகிழமையன்று 250 பேட்டி வெடிமருந்து வெடித்தமையால 100 பேர் மாண்டனர். அயலிலிருந்த அநேகம் வீடுகளும் நாசமாயின.

உண்மைக் காதல்.

செல்லணையைச்சேர்ந்த தொண்டியார்ப் பேட்டையில் ஓர் யெனவன மங்கையும் வாலிபனும் ஓர்கணற்றிற்பிரேதமாகமிதக்கக் காணப்பட்டனர். இறந்த மங்கையின் வயது 20. பெயர் சினனம்மான். வாலிபனின் நாமம் ஞானமுடு காயுடு. இவர்களிருவரும் தமது பெற்றோரை அறியாது இற்றைக்கு 4 மாதங்களுக்குமுன் விவாகஞ் செய்து, எங்கோ சென்று இல்லறம் நடத்திவந்தனர். ஆனால் கொடிய வறுமைப்பிணி அவர்களைப் பிடித்து வாட்டியது. அதனைச் சகிக்க முடியாது, அவர்கள் தம் பெற்றோர் வீட்டிற்கு மீண்டனர். அவரும் அவர்களை உபசரிப்பாரில்லை. எனவே அவர்களிருவரும், மன்முடைந்து இத்தகைய கொடிய உலகத்தில் இருப்பதைவிட இறப்பதே மேல் என எண்ணிக் கிணறதில் வீழ்ந்திறந்து மாண்டனர் என்று சொல்லப்படுகிறது.

இங்கிலாந்திற் பைசாசங்கள்.

ஐரோப்பியர்க்கும் பைசாசங்களில் நம்பிக்கையுண்டு என்பது "டெயிலி டெலிகிராப்" பத்திரிகையில் பிரசுரமாயுள்ள பிரபலம் வடிநத் நிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆர்ன் போர்டில் மேட்டன் கலாசாலையில் இவ்வுருவம் ஒரு அறையில் ஓர் பிரசுக வாது தோன்றத் தட்டியதாகக் கூறப்படுகிறது. அது அக்கலாசாலையில் காவலனாக விருந்தவனுடைய பூதமாகும். அவர் இறந்தபொழுது, கிரணமாகச் சவக்குழியில் புதைக்கப்பட்டாராம். அது முதல் அவர் ஆவி பிரதி வருஷமும் ஒரு வளரியில் தன்னுடல் எரித்துவந்த அறையின் கதவைத் தட்டிச் செல்லுவது வழக்கமென்று எல்லோரும் நம்புகின்றனர் இச்சந்தர்ப்பத்தில் பேலியல் கலாசாலையில் நிகழ்ந்த ஓர் சம்பவமும் ஞாபகத்திற்கு வருகிறது. ஆகுமைக்கல மலையாரதிலே ஓர் இரவில் ஓர் அறைக்கதவு ஒரு பிசாசினால் பிரதி வருஷமும் தட்டப்படுகிறது. இதன் கதை வருமாறு:-அவ்வறையில் முன்னொருகாலத்தில் ஓர் மாணாக்கன் வசித்து வந்தான். அவனைப் பயப்படுத்தவிரும்பி சில மாணாக்கர்கள் கறுப்பு உடைணிந்து முகத்தை மூடிக்கொண்டு ஒரு சவப்பெட்டியையும் எரியும் மெழுகுவர்த்தியையும் கொண்டு வந்து அவ்வறைமுன் வைத்துக் கதவை விரைவாகத் தட்டினார்கள். மாணாக்கன் பயந்து கொண்டு வெளியேவந்து பார்த்து சவப்பெட்டி, தீபம், கறுப்பு மனிதர்கள் முதலியவற்றைக், கண்டதும் மிகவலகிக் கீழே விழுந்து உடனே இறந்து போனான். அப்பால் அவனுடைய ஆவி வருஷவருஷம் அவ்வறைக்கு வந்து செல்லுகிறதாம்.

நாற்றிசை நோக்கு.

——(*)——

"வாஸன்" வரைவது

ஓர் பிரபல மோட்டர்ச் சங்கத்திற்கு எதிரிடையாக இறைக்குச் சில காட்களுக்குமுன் ஓர் குட்டிச்சங்கம் முளைத்தெழுந்தது என்று ஓர் வதந்தி உலவுகின்றது. அதில், தமிழராய்ப் பிறந்தும், தமிழரைக் குறைகூறி கிந்தணைசெய்து வந்த மிஸ்டர் ஜி. ஜி. பொன்னம்பலம் என்ற மேதாவி கொழும்பிலிருந்து எழுந்தருளிவந்து திருக்காட்சி கொடுத்தார்; அவர் ஆண்குக் கூடிய 15 அல்லது 20 டண்சாரதிகளை கோக்கிப் பொலிசாரை நாம் எமது தந்தையர்களைப் போலப் பாவிக்கவேண்டுமென்று திருவாய்மலர்ந்தாராம்! பொலிசார் பொதுஜன வழியர் என்றுதான் இதுகாறும் நாமும் மற்றெல்லோரும் எண்ணிவந்தோம்! வழியரில் இருந்து தந்தையர் பதவிக்குத் தம்மை உயர்த்திவிட்ட நியாகவாத மேதாவிக்குப் பொலிசார் என்றும் கடப்பாடுடையராய் இருத்தல்வேண்டும்.

ஃ ஃ ஃ

அருக்கியைச் சேர்ந்த கான்ஸ்தாக்கி கோப்பின் என்னும் கராத்தின் சங்கத்தார் மோட்டர் பஸ் சாரதிகள் விஷயத்தில் இப்போது ஓர் புதிய பிரமாணம் ஏற்படுத்தியிருக்கின்றனர். மதுபானம் செய்யாதவரும், விபரகம் செய்து சில பிணைகளைப் பெற்றவருமே இனி மோட்டர்பஸ் வண்டிகள் செலுத்தலாம் என்பதே அப்பிரமாணம். பிரமச்சாரி சதமற்கடகம் என்னும் வாக்கியப்படி பிரமச்சாரிகளே பொறுப்புத் தெரியாது கண்டபடி பஸ்களை விரைவாக ஓட்டுவதால் அபாயங்கள் கேரிடுகின்றனவென்பதே அருக்கி கராசங்கத்தின் எண்ணம்போலும்! இப்படிப்பட்ட ஓர் பிரமாணத்தை இன்கும் இயற்றினால் என்ன என்று நாம் கேட்கிறோம்.

ஃ ஃ ஃ

இற்றைக்கு 20 வருஷங்களுக்கு முன்னிருந்த பெண்களிலும்பார்க்க, தற்காலப் பெண்கள் — அதிலும் சிறப்பாகக் கல்லூரிக்குப்போகும் மங்கையர், உயரத்திலும் நிறையாலும் முன்னேறியிருக்கின்றனர் என்று ஓர் பேராசிரியர் தெரிவிக்கின்றனர். 20 ஆண்டுகளுக்குமுன் இருந்த பெண்களின் சராசரி உயரம் 5அடி 1 அங்குலம்; இப்போது அவர்களின் சராசரி உயரம் 5 அடி 3 அங்குலம்; 20 ஆண்டுகளுக்குமுன் பெண்களின் சராசரி நிறை 114 இருத்தலே; இப்போது 117 இருத்தல். பெண்கள் மாட்டு வால் மாதிரி முன்னேறுகிறார்கள் என்று கதறும் அபிமானிகள் இதற்கென்சொல்வர்.

ஃ ஃ ஃ

ஜெர்மனிய விஞ்ஞான சாஸ்திரிகள் இல்வாழ்க்கை விஷயத்தில் ஓர் பெரும் மாற்றத்தைச் செய்ய முற்பட்டுவிட்டனர்; எல்லோரும் ஆண்பிள்ளைகளையே பெறுவதற்கான மார்க்கத்தை அந்தச் சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். இன்னும் மந்த புத்தியுள்ளவர்களைத் தீவிர புத்தியுள்ளவர்களாக்குதற்கும் ஓர் மருந்தை அதே விஞ்ஞானசாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கின்றனராம்! இந்த மருந்தை, இந்த யாழ்ப்பாணத்தில் வருட்புவாதப் பைசாசத்தின் பாற்பட்டு மந்தபுத்தி கொண்டுதிரியும் மூத்தவர்கள் மீது பரீட்சார்த்தமாகப் பிரயோகித்துப் பார்த்தால் என்ன என்று நாம் கேட்கிறோம்.

ஃ ஃ ஃ

மார்ச்மீ 5உ 11-ம் இலக்கச் செஸ்கோட்டைப் புகைரதம் விருதுநகர் ஸ்தானம் பக்கம் வந்துகொண்டிருக்கும் தருணத்தில் டிக்கட் பரிசோதிப்பவர் அந்த வண்டியில் பெரும் சித்திரையிலிருக்கும் ஓர் பிரயாணியிடம் முதலில் டிக்கட் கேட்க, பிரயாணி எழுந்திருக்காது நம்மாயிருக்க அதைக்கண்ட பரிசோதகர் சுமார் 10 மிமிஷம் அதட்டிப் பயமுறுத்திப் பார்த்தும் பயனபட வில்லை. பின்பு மேற்படியார் இறங்கிருப்பதாகத் தெரிந்து பிணத்தை விருதுநகர் புகைரதஸ்தானத்தில் இறக்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. இறந்தவன் பெயர் சொண்டச்சாரி யென்றும், வெளுப்பாய் சீக்காய் இருந்து வந்ததாயும், திருப்பரங்குன்றத்திலிருந்து சாத்தூருக்கு டிக்கட் வைத்திருந்ததாயும் கடைழியில் ரயிலில் உயிர் துறந்திருக்க வேண்டுமென்றும் யூகிக்கப்படுகிறது.

பங்குனி உத்தரம்.

[அச்சுவேலி பிரமஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் எழுதியது]

மலிர்மா லீரிமட லாகல ரீமாமயிலைக்
கலிமாநக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிமாநப் பாடகெய் பங்குனி யுத்திரான்
ஒலிமாநக் காணாதே போகியோ பூவாவாய்.

—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

இமையமலையிலே ஒரு தடாகம் உண்டு. அதிலே, மலையரையன் உமையம்மையாரைத் தன் மகளாகப் பெறுமபொருட்டும், அவரைச் சிவபெருமானுக்கு விவாகஞ்செய்து கொடுத்தற்பொருட்டும் தவஞ்செய்துகொண்டிருந்தான். உமாதேவியார் மலைஅரசனுடைய தவத்திற்கிரங்கிச் சிவபெருமானுடைய அனுமதிப்படி, அவ்வாவியில் விளங்கிய ஒரு தாமரைமலரின் மீது குழந்தைவடிவாய் எழுந்தருளியிருந்தார். அரசன் அதைகண்டு, சிவபெருமானுடைய திருவடியை விதந்து, ஆனந்தக் கடலுள் மூழ்கி, தேவியாரை வணங்கி, அவரைத் தனது கையாலெடுத்துச் சிரமேற்றாங்கி, இல்லத்தை அடைந்துமேனையின் கையிற் கொடுத்து, கிழக்குத்தலைகளைச் சொன்னான். மேனை திருவருளைத் துதித்து அவரைத் தம் மகளென வளர்த்தாள். உமாதேவியார் உத்தராவுபெற்றுச் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்துகொண்டிருந்தார். சிவபெருமான் தவத்தைச் சோதித்து அருக்கிரகித்து மறைந்தார். இதனைச் சேடியர்கள் அறிந்து அரசன் உமாதேவியாரைத் தனது கோயிலுக்கு அழைத்துக்கொண்டு சென்றான். கடவுள் சம்த இருடிகளை அனுப்பி மணம் பேசுவித்தார். இமையமலை அரசன் அதற்கு உடன்பட்டுத் திருக்கைலாசமலையிற் போய்ச் சிவபெருமானை வணங்கி நின்று "எம்பெருமானே! சோதிட நூலோர் மங்கலதினம் எனக்கூறிய பங்குனி உத்தரம் இன்றேயாகுக; உலக மாதாவாகிய உமாதேவியாரைத் மணஞ் செய்தற்பொருட்டு [illegible] என்று பிரார்த்தித்[illegible] இமயமலை அரசனை[illegible] களோடும் இமயமலைக்[illegible] வோம்" என்று திருவாய் மலர[illegible] மதிகொடுத்து அனுப்பியருளினார்.

திருக்கிதேவர் உருத்திரர் முதலியவர்களைத் திருக்கல்யாண தரிசனத்தின் பொருட்டு வரும்வண்ணம் நினைத்தார். அவர்கள் யாவரும் திருக்கைலாசத்துக்கு வரலுற்றார்கள். சிவபெருமான் ஞானமயமாகிய இடபத்தினமீது ஏறியருளி சூரியன் முதலியோர் குடைபிடித்தல் முதலிய தொண்டுகளைச் செய்ய, உலகமுய்யும்வண்ணம் இமயத்தின்மீது சென்றருளினார். அதனையறிந்த இமயமலை யரசன் ஓஷதிபிரத்தம் என்னும் தனது நகரத்துக்கு அழைத்துக்கொண்டு போயினான். பரமசிவன் மணச்சாலைமுன் சென்றவுடனே, இடபத்தினின்றுமிறங்கி, தேவர் துதிப்ப, திருமணப்பந்தரினுள்ளே சென்று இந்திர நீலரத்தினாசனத்தின் மேலே வீற்றிருந்தருளினார். அரசன் பெருமானுடைய திருவடிக்குப் பூசை செய்து, மேனை காகதீர் வார்க்க, வேதமந்திரங்களைச் சொல்லித் தத்தஞ் செய்தான். பிரமன் வியாழநாளும் வெள்ளிநாளும் மற்றையோருஞ் சூழ விவாகக் கிரியைகளைச் செய்து முடித்தார். பின்பு சிவபெருமானையும் உமாதேவியாரையும் அங்குள்ளார் அனைவரும் வணங்கத் தேவனும் தேவியும் அவர்கட்குத் திருவருள் செய்தனர். அச்சமையத்தில் மலையரசன் அங்குளார் அனைவருக்கும் சிவபெருமானுடைய நிர்மாலியப் பொருள்களைக் கொடுக்க, அவர்களெல்லோரும் அவற்றை அணிந்து உடகொண்டு, பெருமகிழ்ச்சி கொண்டார்கள். சிவபெருமான் சிங்காசனத்தினின்றுமிறங்கி, உருத்திரர் முதலியோர் தொண்டுகளைச்செய்ய, இடபவாகனத்திலேறித் திருக்கைலாசமலையை அடைந்து முன்போல வீற்றிருந்தருளினார்.

குரும்பைமுலை மலர்க்குழலி
கொண்டதவம் கண்டு
குறிப்பினொடு சென்றவடன்
முனத்தினை வன்கறித்து
விரும்பும் வரங்கொடுத்தவனை
கேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன்
மேவியூர் வினவில்
அரும்பருகே அரும்பருவ
மறைபரம் பண்பாட
கணியில்லக் கண்டமாடு
மணிபொழில் குழுவலின்
கரும்பருகே கருங்குவளை
கண்வளரும் கழுனி
சமலங்கண் முகமலரும்
கலையமர்வூர் சாரணே.

—சுந்தரமூர்த்திநாயனார்.

சிவபெருமான் கல்யாண சுந்தர மூர்த்தம் கொண்டமை உலகத்துக்குப் பேரமுட்டுதற்காம். அது சித்திரையில் "இமவான் பெற்ற ——பெண்ணினைப் புணர்த்து உயிர்க்குப் பேரின்பமளித்தோரார்" எனவும், "இடப்பாகமாதராளோடிசைத்துமிர்க் கினபமென்றும் அடைப்பானு மதுவும்" எனவும் வருமாற்றாலறிக.

பங்குனிமாதத்தில் உத்தரநட்சத்திரத்திலே, பரமசிவன் பார்வதிதேவியாரைத் திருமணஞ் செய்தருளிய கல்யாணசுந்தர மூர்த்தத்தைப் பூசித்து வணங்குதல் வேண்டும். சிவபூசை எழுந்தருளப்பண்ணிக்கொள்ளாதோர் இம்மூர்த்தத்தைத் தியானித்து விசேஷமாக ஸ்ரீ பஞ்சாட்சர செபஞ் செய்தல்வேண்டும் சிவாலயத்துக்குப் போய், சிவபெருமானுக்கு அபிஷேகாதிகளைச் செய்து, பிரதக்ஷிணஞ்செய்து சுவாமிதத்தல்வேண்டும். சாயங்காலசந்தியாவந்தனுதிகளை விதிப்படி முடித்துக்கொண்டு, பரமானமும் பழமும் நிவேதித்து உட்கொண்டபின் தருபபைப் பசுவிற் சலனித்தல்வேண்டும்.

[அரிசிபோடு பால் நெய் சர்க்கரை (இடித்) ஏலஞ் சுக்கு தேங்காய்த் துருவல் ஆகிய இவற்றைச் சேர்த்து, வாழைக்காயுங் கலப்பது பரமான்னமாம்]

பங்குனி உத்தரத்தில் அநுட்டிக்கும் [illegible] கல்யாண [illegible] [illegible] [illegible]

கங்காஜலத்தின்சிறப்பு.

—(o)—

நோய்க்கிருமிகளை அழிக்கின்றன.

—:o:—

டாக்டர் N. C. நெல்சன் M. D., F. R. C. S., F. R. I. P. H. அவர்கள் "குட்ஹெல்த்" பத்திரிகையில் எழுதுவதாவது:—

ஹிந்துக்கள் கங்காநதி புண்ணிய நதியென்று கருதுகின்றார்கள். அதோடு அதன் ஜலத்தை எவராலும் மலினப்படுத்த முடியாதென்பது அவர்களுடைய நம்பிக்கை. ஆகவே காசி முதலான இடங்களில் கங்கையிலிறங்கி ஸ்நானஞ் செய்பவர்கள் அநேகம்—ஹிந்துக்களென்றிருந்தால் கங்கையில் மூழ்க வேண்டுவது கடமையும் உரிமையுமாகும் என்று நினைக்கின்றனர். இங்ஙனம் லக்ஷலக்ஷமாக ஜனங்கள் மூழ்துவதினாலும் குப்பைகூளங்கள், கரையிலுள்ள ஆபாசங்கள், பிணங்கள் முதலியவற்றை அதில் போடுவதினாலும் கங்காஜலம் அழுக்கடைந்திருக்கலாம் என்று நாம் கருதலாம்.

என்றாலும் நாம் இக்கங்காநதியின் முகத்துவாரதில் உள்ள ஹாலிஃபாக்ஸிலிருந்து இங்கிலாந்து செல்லும் கப்பல்கள் வழியில் உபயோகத்திற்காகக் கங்காஜலத்தை எடுத்து வைத்துக் கொள்ளுவதையும் லண்டன் போய்ச் சேரும் வரையிலும் அது கெட்டுப் போகாம லிருப்பதையும் காண்கின்றோம். இதேமாதிரி இங்கிலாந்திலிருந்து புறப்படுங் கப்பல்கள் அங்கிருந்து தண்ணீரை எடுத்து வைத்துக்கொண்டால் பம்பாய் வருவது வரையிலகூட (அதாவது ஒருவாரம்முன்பு) சுத்தமாயிருப்பதில்லை. ஆகவே இங்கிலாந்துக் கப்பல்கள் ஸூயெஸ், ஏடன் ஆகிய இடங்களில் புதுத்தண்ணீரை எடுத்து சேமிக்கின்றன. எனவே நாம் கங்காநதியை விட தெம்ஸநதி ஜலம் மலினமானதென்று நூக்கலாம்.

இதனை மறு பாஷையில் கூறுவதானால் கங்காஜலம் பரிசுத்தமானதாகும். இந்தச் செய்தி நிபுணர்களாராய்ச்சி[illegible] கொள்ளப் பட[illegible]

[illegible] இருந்த[illegible] எறியப்பட்டன.

அவ்வாறு போடப்பட்டால் [illegible] விஷக்கிருமிகள் உற்பத்தியாகி தண்ணீர் கெட்டழிந்து போகும். ஆனால் கங்காஜலத்தையாராய்ந்த பிரஞ்சு டாக்டர் டி. ஹெரில்லியால் பிணங்களின் இரண்டடி தூரத்தில் கூடவும் கிருமிகளைக் காணமுடியவில்லை. ஆகலால் ஆச்சரியப்பட்டுக் காலரா, வயிற்றுழைச்சல் ஆகிய நோயுடையவர்களிடமிருந்து விஷக்கிருமிகளை எடுத்து வளர்த்து அவற்றின்மீது கங்காஜலத்தை விட்டுச் சூடேற்றிப் பார்த்தார். ஒரு நிமிஷத்தில் கிருமிகள் பூராவும் அழிந்து போயின. பின் இறந்த கிருமிகளுள்ள ஜலத்தை உயிருள்ள கிருமிகள் வசிக்கும் வேறொரு ஜாடியில் விட்டுப் பார்த்தார். அப்போதும் எல்லாக் கிருமிகளும் அழிந்து பட்டன. இங்ஙனம் பல முறை விட்டுப் பார்த்துக் கங்காஜலம் கிருமி நாசகாரி யென்பதைக் கண்டுகொண்டார்.

பின்னர் நோய்வாய்ப்பட்டுக் கங்காஜலத்தையருந்தி நோய்வாசியாகிய மனிதர்களின் சழிவுபொருட்களை எடுத்துத் தம் பரிட்சா முறையைச் சீர் திருத்திக் கொண்டார்.

டாக்டர் டி. ஹெரில்லி மேலும் கங்காஜலத்தைப் பரிசோதித்து ஆராய்ச்சி செய்து அது பல கிருமிகளைக் கொலை செய்து நோயை வாசியாக்கும் என்று கண்டிருக்கிறார். இதுகாறும் சுமார் 2000 விதமான கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சுமார் 100 மாதிரியானவைதான் நோயை உற்பத்தி செய்யும். இவற்றில் பல கங்காஜலத்தால் குணப்படுத்த முடியும்.

விளம்பரம்.

மேலே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலகரவர்களால் யாழ்ப்பாணம் மரக்காலையில் 1934-ம் ஆண்டு பங்குனிமாதம் 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணிக்கு விற்கப்படும்.

Lot I 50 பலாமரங்கள்
Lot II 10 முதிரைமரங்கள்

மேலிய விபரங்களை யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

A. B. Lushingten
வனபரிபாலனர்.

வனபரிபாலனது கந்தோர்,
கொழும்பு 28, பிப்ரவரி 1934.

(G. 44. 19-3-34.)

கடிதம்.

ஆசௌசியின் பொருள்களுக்கும் ஆசௌசமுண்டு.

(ஒரு அதிகார எழுதியது)

ஆசௌசமாசௌசி
யகும்பொருட்குமெய்து
மவன்றனக்குச்சதிவருங்
காலதற்குமுடையும்
சேருநற்பொருட்கணாசாற்
றிழுவனாகாமனாந்
சேருமுனமிச்சதிவாற்
றெப்பாகப் பிரிந்தே
மாருநம்கின்றொழிய
கல்லவற்றுக்குரித்து
வைத்தபொருளாதன்முன்னும்
வரைச்சபொருட்செல்லாம்
ஏருநமாசௌசமிகவே
யிவ்வகம்மா
லெழிற்றுனஞ்சிவபூசை
யாதிகள்செய்திப்பான்.

இன். ஆசௌசியின் பொருள்களுக்கும் ஆசௌசமுண்டாம். அவனுக்குச் சதிவரும்போது புண்ணியாஜலப்புரோட்சணத்தால் லவலைகளுக்குச் சதியாம். ஆசௌசம் வருவதக முன் அதிகத பிரித்து வைத்த பொருள்களுக்கும் தருமதானக்கெனக் குறித்த பொருள்களுக்கும் ஆசௌசமில்லையாம். இப்பொருள்கள் பிரித்துவைத்தமையாற்றான் தருமங்களுக்குதவும் என்பதாம்.

ஆசௌசத்திற் செய்யத்தகாத கருமம் எதுவெனில்

சாவேசருகோகாக்கியே
கர்மஞ்சியாகஇஷ்யதே!
நிரவயானிபிப்ரதுஷ்பக்தி
வாதயாயம்சிஷிதியதே!!

இன். அகமென்னும் பெயரையுடைய மரணசௌசத்திலும் சனனசௌசத்திலும் கிரியைகளை விடுதல் வேண்டும். அங்கே புருடன் மாதமிமன்றித் நிரவியங்களும் மிகவசுத்தமாகின்றன. தன் வேதமோதுதலும் மந்திரசெப முதலியவும் விலக்கப்படுகின்றது என்பதாம்.

சாமத்ரியம்கர்மாகிஹோதரஞ்ச
பிரேதகார்யாணிசாப்ரதா:!
சூர்யாதர்சிபோதஹோமம்துகாரயேர்
நாய்யதாசரேத!!

இன்: விலக்கப்பட்ட வாசிக சந்தியாவந்தனத்தை விடுதது மானசமாகிய அனுஷ்டானத தொழிலையும் காலமாகிய செப்பப்படும் தீவேட்டியையும் பின்

[illegible]

செய்து வந்திதலாம்; இது செயயும்[illegible] கிரிவை மாதமும் வாசிகமாக வுச்சரித்துச் சூரியனை நினைந்து அர்க்கியம் கொடுத்து வலஞ்செய்தல் வேண்டும்.

தோற்றிஞ்சுகத்தோன்
மரணசௌசதிதனுள்ளோன்
சாற்றிடுமிவர்க்கொடுட்ட
தண்ணறுமலர்பாண்டாதி
போற்றிடல்விதிக

எனும் பிரமாணத்தினால் சனனமரணசௌசங்கள் தொட்ட புஷ்பம் பாண்டம் முதலியவைகளைத் தள்ளி விடவேண்டும் என அறியக்கிடக்கின்றது. இன்னும் அநேக பிரமாணங்களுமுண்டு.

இவைகளைச் சற்றேனுமறியாது தெரிந்தவர்கள் சொல்லியதையும் கோதுமொரு உயர்குலமுடையராயிருந்தும் சுவாமி விதிவலம் வருந் தருணம் பிறரதுடம் நீரும் புஷ்பமுதலியவற்றைத் தம் கிட்டுவரையில வைத்து ஆராதிரிக்க செய்கின்றனர்; பிறர் கொண்டுவந்து வைத்தாலும் ஆசௌசமுள்ள இடத்திற்குத்தானே அவைகள் வருகின்றன.

எவனொருவன் மோகத்தினாலாவது (அறியாமை) இடம்பவிருத்தியினாலாவது (அதென்ன இதென்ன வென சாஸ்திரங்களிற் சொன்னதென்று அவர்காரர் சொன்னது எண்ணல்) ஆசௌசத்துடன் கோயில் முதலியவற்றில் செல்லுதல், விலக்கிய கருமங்களைச் செய்தல், செட்டியிடம் எனுங்குருதமைந்த

"மோகாத்வாடம்விருதியாவா
சவஜாதியுக்த"

என்பதாதி விதியையுங் கண்டிலர் போலும்.

இரதமைமேற்சனனமரணியாக
வியம்புமிவையியல்புடனையுட்டிப்போர்கள்
நரதமதசாரியாவக்தனுகி
தனுகிதகருமங்களியற்றலாகும்
நிரதவிரதங்களையுமியற்றலாகும்
நிரினிடைமூழ்கிடவேசுதியாகும்
நிரதமிழ்தானமொடுவாக்களோதல்
நிரவனருச்சனையாதியியற்றலாகா.

இன். சனனமரணி யாசௌசங்களை யனுட்டிப்போர் ஸ்நானஞ்செய்து தங்கள் நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்யலாம், நித்திய விரதங்களையு மனுஷ்டிக்கலாம், தானங்கொடுத்தல் ஏற்றல் வேதமுதலியவற்றை யோதல் பிரசங்கஞ் செய்தல் முதலியவற்றைச் செய்யலாகாது. ஆமாரத்த பூசை செய்யும்போது மந்திர ஸ்நானஞ் செய்து பூசையைச் செய்தல் வேண்டும். அதற்கருணம் ஆசௌசம் கலமபதிரோதகம் போல், அதாவது தாமரையிலையில் நீர்த்துளி போலிருக்கும்.

உடையவர் பூசைசெய்வோன் ஆசௌசகாலதிற் புறப்பூசை செய்தல் குற்றமாதலால் தனது குருவைக் கொண்டாதல் தன்னோடொத்தவனைக் கொண்டாதல் பூசையைச் செய்கிறது, பூசை முடிவிற் புறமண்டபதிலினின்று நியானிக்கத் தத்துவத்திராய மந்திரங்களாற் சுவாமியின் மேற்படியாலே மூன்றுதரம் புஷ்பாஞ்சலி செய்யவேண்டும்.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின் முதன்மையானதும்
சிறந்ததுமான இவ்விய ஔடதம்.
மிருகக்கொழுப்பு கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.

(Y18. 11-2-33—31-3-34.)

குடைமார்க் ஓடுகள்.

உற்பத்தியாக்குவோர்: ஐரோப்பிய மதுரைக் கம்பெனியார்.
இலேசானது; பலமானது; மலிவானது
அடைமழைக்குங் கசியாது; உஷ்ணம் வீராது.
10 தங்கமெடல்கள் பரிசாகப் பெற்றன.

குடைமார்க் ஓடுகளே குவலயமெங்கும்
அபிமானிக்கப் படுவன.

ராமநாதபுரம் சேதுபதி அரசினர் சுப்ரமணியத்திற்கு
55000 குடைமார்க் ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன
118 ஓடுகள் 100 சதுர அடி லிஸ்நாரத்தை மூடப் போதுமானவை
இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளும், தளவரிசைக் கற்களும், அழகுதமான பைப்புகளுமுண்டு.
துறைமுகத்துக்கு அருகாமையில் கடற்கரைத் தெருவில்
புதிதாய்த் திறக்கிருக்கும் ஸ்டோரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. செருபீம் & பிறதர்,
ஏஜெண்ட்: பெரியதெரு யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34

விளம்பரம்.

[illegible]ன் மிக்க சிவநேய அடியார்களே!

[illegible]வ யென்னும் மகாபுண்ணிய [illegible] 2000 ரூபாக்களுக்கு [illegible]ரயில் எழுந்தருளித் [illegible]டிக்கும் ஸ்ரீ சிதிர [illegible]பின் திருவாட்களின் அடியார் [illegible]தமாடி, குளிக்கப்போய்ச் சேர்ந்தைப் [illegible]வன் சிலமாய்ப் போதலை, அதிர்ந்த மாடும் பக்தநிற்குக் கற்படிகள் வருக்கத் தம் பன்கடவைத் தமிழர் ஐக்கிய சங்கத்தாரிடை [illegible]ராம், எம் சங்க அங்கத்தவர்களினதும் மற்றும் [illegible]ஷர்ச் கெரேயச் செல்வர்களினதும் உதவிபெற்றுக் குறித்த திருப்பணியை நிறைவேற்ற நிச்சயித்து, எமது சங்கத் தலைவரும், ஓய்வுபெற்ற மரியுமான ஸ்ரீமான் பி. டபிள்யூ. ஹபிபிள்ளை (Retired Overseer P. W. D. Habarana) அவர்களைப் பணஞ்சேர்க்க நியமித்திருக்கிறோம்.

ஆகையால் இக்கிருப்பணி வேலையில் ஈடுபட விரும்புவோர் அன்பர்களே! தாமனுப்பக் கருதும் பணத்தைக் குறித்த தனாதிகாரியின் பேருக்கனுப்பிவைக்குமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தம்பன்கடவை தமிழர் ஐக்கிய சங்கம்.

(Mis. 229. 12-3-to-26-3-34)

காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்ன்மென்ட், முனிசிப்பல்
கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமெடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:—64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை.-316-ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏஜென்ஸி கொடுக்கும் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.

Y. 2. 31-3-34.)

பின்னிற்க வேண்டாம்!

நமது தாய் நாட்டுச் சோதரர் பூகம்ப அநர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப்படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக்கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பேண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனுலயத்திற்கு அனுப்பி வையுங்கள் எச்சிறு தோகையேனும் உவத்தேற்றுக் கொள்ளப்படும். போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

மானேஜர்.

	ரூ.	சி.
முன்னர் உபகரிக்கப்பட்டது.	936	28
காலி குலந்தலாத்தோட்டத்து ஸ்ரீ P. C பொன்னையாவால் சேகரிக்கப்பட்டது.		
ஸ்ரீ K. சனகாபை (தெற்பிட்டி)	5	00
ஷ தோட்டத்து உதவிமோகத்தர்	14	00
ஷ தோட்டத்துக் கங்காணிகள்	4	00
ஷ தோட்டத்துத் தச்சர்முதலியோர்	4	00
ஷ தோட்டத்துக் கங்காணிகள் தொழிலாளர்	54	50
கூக 81 50, அதில் மணிஆர்டர் கமிஷன் 96 சதம் போக மீதி	80	54
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உயர்தர விடுதிச்சாலை மாணவர்	8	50
ஸ்ரீ A. சண்முகநாதர் (திருநெல்வேலி)	1	00
ஆக ரூ.	1026	32

விவாகம்.

கண்டி அரசினர் வைத்தியசாலையிற் கடமை பார்க்கும் டக்டர் R. கந்தையா அவர்களுக்கும், ஸொந்தன், கொற்றுபாறு டக்டர் P. கனகசபையவர்களின் புத்திரி ஸ்ரீமதி சிவபாக்கியவநியம்மாளுக்கும்சென்ற 16 ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 9-45 மணிக்கு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் வண்ணார்பண்ணையில் உள்ள "மங்களகிரி"யில் விவாகம் சிறப்பாக நடந்தேறியது. மணமகள் சுகாதார வைத்தியப்பகுதிப் பிரதம விகிதாயுள்ள ஸ்ரீ E. P. செல்லையா, மத பரிபாலனப் பகுதியில் இருந்து இளைப்பாறிய ஸ்ரீ E. P. இராசையா என்பவர்களுக்கு மகன்முறையும், அடைவு பிடிக்கும் பிரபல வர்த்தகர் ஸ்ரீ K. செல்லையா அவர்களுக்கு மருமகள் முறையும் பூண்டவர்.

மணமக்கள் அஷ்ட ஐசுவரியமும் பெற்று வாழ்வாராக.

—கிள்ளானில் தபாற்கந்தோரதிபராயிருந்து இளைப்பாறியிருக்கும் மயிலிட்டி ஸ்ரீசி. அம்பலவாணரவர்களின் தத்த புத்திரனும் மல்லாகம் ஸ்ரீ கனகரத்தினமவர்களின் புதல்வருமாகிய ஸ்ரீ சின்னத்தம்பரவர்களுக்கும், சென்னான் பத்உஞ்சோர்தோட்டத்தில் டக்டராயிருந்த சுன்னாகம் ஸ்ரீ க. சங்கரப்பிள்ளை அவர்களின் இரண்டாவது புதல்வியும் மட்டக்களப்புச் சிவானந்த ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர் ஸ்ரீ ச. அப்பிளைபாகன் பி. ஏ. அவர்களின் சகோதரியுமாகிய ஸ்ரீமதி மாலைமணிக்கும் சென்ற(16-3-34) வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில், மணமகளில்லத்தில் விவாகம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

மணமக்கள் பதினாறு பேறுபேறுகளும் பெற்று நீண்ட ஆயுளுடன் இனிது வாழ இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

80 லட்சம் பவுண்!

நற்போதைய வல்லரசுகளின் ஆகாய விமானப் படைக்குச் சிறந்ததான ஓர் படையை இங்கிலாந்து வைத்திருக்க வேண்டுமானுல், அதற்கு வருடந்தோறும் 80 லட்சம் பவுண்கள செலவாகும் எனச் சென்ற புதன்கிழமை கூடிய பாராளுமன்றத்துப் பொதுமக்கள் சபையில் சேர் பிலிப்ஸாஸூன் என்பவர் கூறினர்

ஆங்கில-பிரான்சியச்சமாதானம்

வியாபார விஷயமாக இப்போது சில காலமாக இங்கிலாந்திற்கும் பிரான்ஸ்காட்டிற்குமிடையே பிணக்கு இருந்து வருகின்றமை தென்பது முன்னரே இப்பத்திரிகையில் வெளிவந்த செய்தியாகும். சென்ற புதன்கிழமை பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் பிரான்சியப்பிரதிநிதிகளும் சந்தித்து இந்தப் பிணக்கை தழிப்பதற்காக ஆலோசனை செய்தார்கள்.

இந்தியச் செய்திகள்.

அடிகளின் பிகார் விஜயம்.

சென்ற புதன்கிழமை தொடக்கமாக மகாத்மாகாந்தியடிகள் பிகார் என்கும் சுற்றுப் பிரயாணம் செய்து பூகம்ப அநர்த்தங்களைக் அவதானித்து வருகின்றார்.

புதிய அரசியற்றிட்டம்.

டெல்லியில் காங்கிரஸ் தலைவர்களின் மகாநாட்டைக் கூட்டுவதில்லை என பம்பாயில் சென்றவாரம் தீர்மானிக்கப்பட்டதையிட்டுப் பண்டிதர் மதன்மோகன் மாலவியா அவர்கள் பின்வருமாறு கூறினர்: "கூறப்போகும் புதிய அரசியற்றிட்டம் எத்தகைமையானது என்பதை அறியமுன் தேசியமகாசபையினர் புதிய சட்டசபைகளைக் கைப்பற்றுவதோ விடுவதோ என்பதைப் பற்றி யோசித்து என்ன பயன்? தேசான்மைக்கேதுவான ஓர் திட்டம் ஒன்றினைப் பெறுவதற்காகவே நாம் முயற்சி செய்யவேண்டும்."

அரசியலும் தீண்டாதாரும்.

சென்ற புதன்கிழமையன்று சென்னை மகாநாத்து வரவு செலவுத் திட்டம், சட்டசபையில் விவாதிக்கப்பட்டது. அப்போது அரசியற் சீர்திருத்தத்தினை அளிக்கும் விஷயத்தில் பிரிட்டிஷ் அரசினர் தாமதிப்பது கண்டிக்கப்படத்தக்கது எனப் பல அங்கத்தவர் கூறினர்: டக்டர் பீ. சுப்பிராயன் அவர்கள் தீண்டாதார் ஆலயப் பிரவேச விஷயத்தில் உயர்ஜாதி ஹிந்துக்கள் கொண்டுள்ள பொய்மையைக் கண்டித்துப் பேசினுர். 'நாங்கள் சுயராஜ்யம் வேண்டும் என்கிறோம். ஆனுல் எச்சுயராஜ்யமாகிய சிலருக்கு மாத்திரம் செய்தலாகும் அக்கிரமம் எம்மைச் சுயராஜ்யாதிபதிற்கு அருகதையற்றவராக்குகின்றது. இப்படியான நிலைமை இன்னும் இருக்குமானுல், எமக்குச் சுயராஜ்யம் வேண்டாமென்றே நான் இனி வாதிடுவேன்" என்று டக்டர் சுப்பராயன் கூறினுர்.

வல்லபாய்படேல்.

குர்ஜராத்து முடிசூடாமன்னரும் தற்போது சிறைக்கூடத்தில் தண்டனை அனுபவிப்பவருமான சர்தார் வல்லபாய்படேல் அவர்கள் இப்போது யோகாப்பியாசத்தில் ஈடுபட்டு வருதலினுல் அவரின் தேகநிலைமை முன்னரிலும்பார்க்க குணமடைந்து வருகிறது.

ஆற்றில் 10 பேர் மாண்டனர்.

ஹுவாலி நதியில் நேற்றையதினம் ஓர் தோணியிற் பலர் பிரயாணம் செய்தனர். நட்டாற்றில், ஓர் சுழிக்காற்று வீசுதலால் தோணி கவிழ்ந்துபோகப் பிரயாணிகள் பலரும் நீரினுள் வீழ்ந்தனர் அவர்களில் இருவர் ஒருவாறு நீந்திக் கரையேறினர் மற்றும் 10 பேரும் நீரில் அமிழ்ந்தி மாண்டனர்.

சென்னைமாகாண வரவுசெலவுத் திட்டம்.

1934 35ம் வருஷத்தின் வரவு செலவு சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டபடி காணப்படுகிறது:—

எதிர்பார்க்கப்படும் வருமானம் 1737 லட்சரூபா. எதிர்பார்க்கப்படும் செலவு 1829 லட்சம். 1933ம் 34ம் வருஷத்தில் வந்தவருமானம் 1754 லட்சம். ஆரம்ப மையிருப்பு 407 லட்சம். செலவு திட்டம் 1806 லட்சம், எதிர்பார்க்கப்படும்மையிருப்பு 335 லட்சம்.

1932ம் 33ம் வருஷத்தில் ஆரம்ப இருப்பு 235 லட்சம். வருமானம் 2003 லட்சம். செலவு 1831 லட்சம்; வருஷக் கடைசி மையிருப்பு 407 லட்சம்.

மலேரியா
மஹாதைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலைச்சுரக் தணியவேண்டில் இத்தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வு சோகத்துக்கு இது கைகண்ட தைலம். நூற்றுக்கணக்கானோர் நற்சாட்சிப்பத்திர மளித்துளர். கணைக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீசசம், சீதக எரிவு, "ஹிஸ்டீரியா" வாய்வு இப்படியான சோகங்களை மாற்றுவதில் வல்லமை உள்ளது.

இங்ஙனம்,
பொ. செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்,
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
(Y. 204. 12-2—11-2-35)

யாழ்ப்பாணம்
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.

[மேற்படி சங்கக் காரியதரிசியாகிய பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்கள் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:-]

இச்சங்கத்துப் பரீட்சைகளுக்கு இவ்வாண்டில் தோற்றவிருக்கும் பரீக்ஷார்த்திகள் அறியும்படியாக அடியிற்காணும் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

(1.) பிரவேச பரீட்சையில் இரண்டாம் பாடவகையாகிய இலக்கணத்துக்கு இப்போது 100 அமிசம் என்றிருப்பது இவ்வாண்டுப் பரீக்ஷை தொடங்கி 200 அமிசமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

முழுப்பரீக்ஷையிலும் சித்திபெற்றவர்களுள் இரண்டாம் பாடவகையில் முதலாம் படியாகக் கூடின அமிசம்பெற்ற ஒருவர்க்குப் பத்துரூபாப் பரிசில் வழங்கப்படும். இப்பரிசில் நிதி ஸ்ரீ காக் க. ஐயத்துரை (பிறக்ரர்) அவர்களால் வழங்கப்படும்.

(2) பாலபண்டித பரீக்ஷைக்கு ஒரு பாடமாக வைக்கப்பட்டுள்ள கலிங்கத்துப் பரணிச் சுருக்கம் என்பது பாடலிதான நிதிற் பிழையைக் கலிங்கத்துப் பரணித்திரட்டு என மாறி எழுதப்பட்டமையால் குறித்த புத்தகம் எது எனத் தெரியாது பரீக்ஷார்த்திகள் திகைப்பாராயினர். கலிங்கத்துப் பரணிச் சுருக்கம் என்பது பண்டித அ கோபாலபிள்ளை அவர்களால் 256 தாழிசைகள் பொறுக்கியெடுத்துப் பதிப்பிக்கப்பட்ட சிறு பதிப்பாகும். விலை ஆறணு. கிடைக்குமிடம்: செந்தமிழ் மந்திரம் புத்தகசாலை, மயிலாப்பூர், சென்னை என்பது,

(3) பாலபண்டித பரீட்சைக்குரிய இன்னொரு பாடபுத்தகமாகிய "மண்ணியற் சிறுதேர்" என்பது மிகப் பிந்தி வெளிவந்தமையாலும் பரீக்ஷார்த்திகளுக்கு அது முழுதையும் படித்தற்குப் போதிய காலம் வாய்க்கப்பெறுமையாலும் இவ்வாண்டுப் பரீட்சையில் அப்புத்தகத்தில் தரைவாசி அதாவது முதல்நாலு அங்கங்கள் மாத்திரமே பரீட்சிக்கப்படும் பாகமாகும் என்றதைப் பரீக்ஷார்த்திகள் அறிந்துகொள்வாராக

சேணியதெரு,
அரசடிப் பிள்ளையார் கோயில்.

மேற்படி கோவிலில் நற்போது நடக்கும் வருடத்தின் பார்வைக்கு ஏற்பட்டவர், வழக்கமாய்ப் பஞ்சாங்கர்தாக்கள்செய்த முறைமையை விட்டுப் புதிய ஏற்பாடுகளை யதேச்சாதிகாரமாகச் செய்துவருகின்றனர்ன், வீதியில் நிற்கும் தாக, மேம்புக்கு யாதொரு பிரிட்டையுஞ் செய்யாமல் நித்திய பூசை செய்விக்கிறுரென்றும், உட்பூசை முடிவுடன் கோவாம், திருப்புராணம் ஓதும் வழக்கத்தை விடுத்து, பலிபீடத்துக்குப் பூசை முடித்துக் கடையாய்க் கோவாரம் ஓதச்சொல்லிப் பூசகரை வற்புறுத்துகின்றுரென்றும், இவ்வாறு ஒரு புதிய காரியத்தைச் செய்யமுன் மற்றக் கால்வரோடும் ஆலோசித்துச்செய்வதே முறையாயிருக்க, யதேச்சாதிகாரமாகச் செய்தல் முறையல்லவென்றும் ஓர் "தர்மவோர்" எம்க்குத் தெரிவிக்கின்றுர். இன்னும், ஊரவர்களால் நாபரிக்கப்பட்டுப் பஞ்சாங்கர்தாக்களாற் பார்வையிடப்பட்டுவரும் கோவிலில், வெயுண்ணிய சிலர்கள், அபிஷேகம், விசேஷபூசை முதலியன செய்விக்குங்காலத்தில், உபயக்காரர் காரியதரிசியைக் கனம் பண்ணுமாறாகப் பூசகர்கள் மூலமாகக் காணிக்கை கொடுப்பதை அறியாது, காணிக்கை தனக்கு கட்டாயம் இடுக வேண்டுமெனக்காரியதரிசியைத்துன்புறுத்துகின்றுரென்றும், இது நகுதியற்ற எண்ணமாகுமென்றும் "தர்மவோர்" கூறி, பஞ்சாங்கர்களாகிய மற்றக்காலங்களும் கூடியசீக்கிரத்தில் இதைப் பற்றிச் சிந்தித்துத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறுர்.

அரசாங்க சபைத் தெரிவு!

விளம்பரங்கள் அழகாகவும்
துண்டுப் பத்திரங்கள் முதலியன துப்பரவாகவும்
சுவர் விளம்பரங்கள் பல வர்ண மைகளிலும்

சைவப் பிரகாச யந்திரசாலையில்
அச்சடித்துக் கொடுக்கப்படும்.

சிறந்த வேலை! உத்தரவாதம்!

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

முற்பணமே கட்டவேண்டும்.

மானேஜர்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்ஸ பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் சு. இ. கந்தையா கடையில் அடைவு வைத்து இப்போது தவணைப்படி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

நம்.	திக.	ரூ.	ஊர்.	பெயர்.	நகைகளின் விபரம்
621	21-2-1931	5		சங்குவேலி சபாபதி ஐயர்	இரத்தினேஸ்வர ஐயர் பொன் வங்கிரத்தகம் ஒன்று [சிறம் 1
639	9-3-1931	8		காரைநிவு கணபதிப்பிள்ளை	வித்திலிங்கம் பொன் னொவர் மோ
708	21-5-1931	22		வயாவிளான் சுப்பிரமணியம்	அப்பாபிள்ளை பொன் இ. மி. கல் முத்து கட்டிய முப்புடன் கைகாப்பு ஒன்று [ாப்பு சோடி 1
726	19-7-1931	20		வண்ணிழக்கு கந்தசாமி	செட்டி இராசையா பொன் சாதா டைமன்
792	5-10-1931	12		சின்னக் கோவிலடி	டபுல்யு பீ. கே. துரைச்சாமி பொன் கிளி மோதிரம் 1 ஒரு சிப்பு கட்டிய மோதிரம் ஒன்று [ச்சி 1
820	24-10-1931	12		மண்டதிவு	சின்னப்பு கனகசபை பொன் இ. மி. கல் வைத்த புரோ
831	28-10-1931	100		வண்ணிழக்கு	இராசம்மாள் கந்தசாமி பொன் சாதி சிப்புமென்னையும் வைத்த பதக்கத்துடன் செட்டிப்பூரான் அட்டியல் ஒன்று
917	25-1-1932	6		கந்தர்மடம்	சி. தா. சோமசுந்தரம் பொன் பெட்டிமோதிரம் ஒன்று
967	4-4-1932	30		மானிப்பாய்	தம்மோதிரம்பிள்ளை நில்லோதரிபொன் வயிரச் சன்னம் ஒன்று கட்டிய சிப்புக்கல் ஜோடி ஒன்று
972	12-4-1932	35		ஆனைப்பந்தியடி	செல்லையா இராசையா பொன் இ. மி. கல் முப்புடன் கைச்சங்கிலி ஒன்று
1002	21 5-1932	10		கண்டுக்குளி	ஏ. செ. வஸ்டியாம்பிள்ளை பொன் கிளிமோதிரம் 1
1051	6-9-1932	33		கொக்குவில்	செல்லையாசுப்பையா பொன் பட்டணம்காப்பு ஜோடி 1
1130	11-11-1932	45		ஆனைப்பந்தியடி	க. நி. சம்பந்தர் பொன் அச்சரக்கூடு ஒன்று
1162	6-12-1932	65		அராலி	சின்னப்பு கந்தையா பொன் இ. மி. கல் கட்டிய மலைப் பதைக்கம் ஒன்று [ரச் 1
1214	29-12-1932	7		சிராம்பியடி	சிற்றம்பலம் வித்திலிங்கம் பொன் இ. மி. கல் மோதி
1246	12-1-1933	50		அராலி	தம்பையா அரியகுட்டி பொன் காப்பு ஜோடி 1 மோதிரம் 2
1250	12-1-1933	16		மாவிட்டபுரம்	நிகு. சிற்றம்பலம் டாராஜா பொன் மோதிரம் 1
1276	29-1-1933	10		நட்டாங்கண்டி	சோமசுந்தரம் பொன் இ.மி. கல்லதைக்கம் 1
1288	6-2-1933	12		சுன்னாகம்	கந்தையா காலிலிங்கம் பொன் இ. மி. கல் மூன்று கட்டிய மோதிரம் 1
1289	6-2-1933	180		கல்லூர்	முருகேசு கனகரெத்தினம் பொன் ஆறு வயிரச்சன்னம் கட்டிய தோடு ஜோடி ஒன்று [தரைப்புவண் 1
1305	17-2-1933	8		உடுவில்	முத்தந்தமயி அரியரெத்தினம் பொன் குண்டி கட்டிய
1327	5-3-1933	10		வண்ணிழக்கு	சுவாமிநாதர் முருகப்பா பொன் இ. மி. கல் வைத்தோர் 1

விற்பனவு ஸ்ரீமுக வருஷம் பங்குனிமீ 22-ந் திகதிக்குச் சரியான (4-4-34) புதன்கிழமை காலை 8 மணிதொடக்கம் எடுப்பட்டகை பிறகீலைகளாக மிகுதி மேற்படி கடையிட பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐம்பிள்ளை உடையார்,
கெஷீன் மேனேஜர்.

(Mis. 234, 19&22-3-34.)

அகில இலங்கை

ஆதாய லெச் சீட்டுக் கம்பனி

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

நீங்கள் இதுவரை ஈடுவைத்துள்ள
காணிகளை மீள விரும்பின்
எங்கள் கம்பனியில் 1000 ரூபாச் சீட்டிற் சேருங்கள்.

மாதக் கட்டணம் 40 ரூபா;
மாசம் 25 மாத்திரமே.

இக்கம்பனியொன்றே சீட்டைப்பெற்ற, பெருத இருபாலார்க்கும்
கழிவுரிமையைக் கொடுத்திருக்கிறது.

T. Sellathamby,
Manager.

(Y. 197. 8-2—7-2-35) (தி)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை சாதாரணம்பார்த்தில் உலகக்ஷேமைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன க்ஷேமத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குன்றுமப்பூ, சிலாஜித், கண்டூரி, குமரன்தாகா, பிதாரி, சாலாமுஸ்லி, சப்பேமுர்ஸ்லி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவரி, நீர்முள்ளி விதை, ரோசப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் சீரிதிவு,சீர்கடுப்பு,சீரடைப்பு, மூலச்சூடு, ஜகுவருஷத்துள் உண்டாயிக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோகங்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால்ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததினால் முன் மனியாடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
வெளுனாரோக்கியசாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு

(Y 179. 1-1-34 to 31-12-34.) சிலோன்.

வந்துவிட்டன! வந்துவிட்டன!!

குறைந்தவிலை! குறைந்தவிலை!

பெயர்பெற்ற பவுண்மார்க் ஓடுகள்.

திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் இன்று தொடக்கம் (1-3-34) ஏறக்குறைய ஒருவாரம் வரையில் மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.



தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.
1-3-34.

Phone No. 93.

(Y. 3. 26-4-34).

N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y. 201. 8 2—7-2 35) தி

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரைசிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசங்காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பின்னர் எந்தரோமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சரிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விதி வட்டியடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்த ஏற்படும் வட்டியும் முறையே 3 விதம், 4 விதம், 6 விதம், 8 விதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "ராஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறுங் கட்டுபவர்களுக்கு 10 விதிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விதிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y.143 21-11-33.—20-11-34) தி

கியாத நாத மணிகள்.

தேவாலயங்களிலும், வித்தியாலயங்களிலும் உபயோகப்படத்தக்க, காதுக்கினிய ஓசையோடுகூடிய "கியாத நாத மணிகள்" சிறுமணி தொடக்கம் மிகப் பெரிய மணி வரையில் எங்களிடத்தில் எத்தரோமும் பெறத்தக்கன. இன்னும் விரும்பியவர்கள் தங்களுக்கு வேண்டிய மணியின் பிரமாணத்தையும் நிறையையுந்தெரிவித்தால், ஒருகுறித்த தவணைக்குள் தவறாமற் செய்துகொடுக்க ஆயத்தமாயிருக்கின்றோம். எங்கள் தொழிற்சாலையில் ஆக்கப்பட்டமணிகளையாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன.

S. A தம்பிப்பிள்ளை & சன்ஸ்,
நல்லூர்.

(Y. 74. 26-2—25-3 34.) தி

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யதர்க்கோங்க சத்தியம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Monday 19, March 1934.